<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

<u>அ.வ எண்: 231/2024 (வாசா.1 – மதன் மோகன்) தேதி: 05.02.2026.</u>

<u>வாசா.1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 11,27,29, 31,36,37,44,51,53,62,65 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

சங்க தேர்தலில் தேர்தல் ஆணையாளர் நியமணம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த தேர்தல் ஆணையாளர் எந்த நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நியமணம் செய்யப்பட்டார் என்றால் மதுரை உயர்நீதிமன்ற உத்தரவின் படி நியமணம் செய்யப்பட்டார். 66 வது பிரதிவாதியைதான் தேர்தல் ஆணையாளராக நியமணம் செய்யப்பட்டார் என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் தேர்தல் நாமினேஷன் தாக்கல் செய்ய எனது மாமா சென்ற போது நானும் உடன் முன்மொழிய சென்றதால் அந்த விவரம் எனக்கு தெரிந்தது. அந்த உத்தரவு எந்த தேதியில் பிறப்பிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. தேர்தல் ஆணையாளர் நடத்திய தேர்தல் செல்லாது என பரிகாரம் கேட்டுதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் தேர்தல் ஆணையர் நியமணமே தவறானது என குறிப்பிட்டுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. தேர்தல் ஆணையர் தேர்தல் நடத்துவதற்கு அவருக்கு உதவியாக வழக்கறிஞர்கள் இருந்தார்கள். அது தவறு என்றும் ஆசிரியர்களை வைத்துதான் நடத்த

வேண்டும் என்பதுதான் எங்கள் தரப்பு கட்சி ஆகும். அந்த வழக்கறிஞர்கள் கோவில்பட்டியை சார்ந்தவர்கள் கிடையாது என்றாலும், அவர்களுக்கு சங்கத்தில் ஓட்டு உரிமை இல்லை என்றாலும், அவர்கள் சங்கத்தில் உறுப்பினர்கள் கிடையாது என்றாலும் எனக்கு தெரியாது. தேர்தலுக்கு வாக்களிக்க வரும் உறுப்பினர்களை அடையாளம் காட்டதான் நான் பூத் ஏஜெண்ட்டாக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். ஆனால் வாக்களிக்க வந்த போது உறுப்பினர் அடையாள அட்டை இல்லாத நபர்களும் வாக்களிக்க வந்ததாக கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு மனு ரசீது வழங்கப்பட்டது. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த மனு ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேர்தல் நடந்த இடம் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய எல்கைக்குள் வராது என்றால் பாதுகாப்பிற்கு கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் இருந்துதான் போலீஸார் வந்திருந்தார்கள். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**: இதர பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.